Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.5/2017

**Depositions of PW- 6**

| Name | **திரு.ராஜவேல்** | Occupation | பணி ஓய்வு பெற்ற சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | **செந்தூரப்பன்** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of August 2025.

13.08.2025

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று ஜமீன் நத்தம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கிருஷணன்கோவில் காவல்நிலைய குற்ற எண் 18/2016 வழககினை முதல் விசாரணை செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமமூர்த்தி என்பவர் இறந்துவிட்டபடியால் அவர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 16.01.2016 தேதி சிறப்பு சார்பு ஆய்வாளர் ராமமூர்த்தி நிலைய பொறுப்பிலிருந்தபோது வத்திராயிருபபு அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனை பெற்றுக்கொண்டு மருத்துவமனை சென்று சிகிச்சையிலிருந்த அதிஷ்டகுமார் என்பவரிடம் புகார் மனுவை பெற்றுக்கொண்டு நிலையம் வந்து காவல்நிலைய குற்ற எண் 18/2016 பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 4 ஆகும். புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை அசலினை சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்று மாலை 7 மணிக்கு சம்பவ இடம் சென்று

சாட்சிகள் மலைச்செல்வம் மற்றும் முத்துச்சாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். வரைபடம் அ.சா.ஆ 5 ஆகும். சாட்சிகள் அதிஷ்டகுமார் மற்றும் முத்துகிருஷ்ணன் சுமதி, மலைச்செல்வம் மற்றும் முத்துச்சாமி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வார்ககுமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் எதிரியை தேடி வரும்போது வாக்கின் எதிரி திருவில்லிபுத்தூர் அமர்வு நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்து இருநபர் பிணையில் சென்றுள்ளார். பின்னர் வழக்கினை மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். வழக்கினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரித்தபோது சிறப்பு சார்பு ஆய்பவாளரிடம் கூறிய வாக்குமூலமே என்னிடம் கூறியதால் தனியாகக வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. இவ்வழக்கில் காயம்பட்ட அதிஷ்டகுமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை மருத்துவர் விஜயபெருமாள் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். இவ்வழக்கின் சட்டப்பிரிவான 294(பி), 324, 506(2) இதச விலிருந்து பிரிவுகள் 294(பி), 324, 506(1) இதச ஆக மாற்றம் செய்து சட்ட மாறுதல் அறிக்கையை நீதிமனறத்திற்கு அனுப்பி வைத்தேன். சட்ட மாறுதல் அறிக்கை அ.சா.ஆ 6 ஆகும். முதல் விசாரணை செய்த சிறப்பு சார்பு ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இத்துடன் எனது விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 294(பி), 324, 506(1) இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.5/2017

**Depositions of PW- 5**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.விஜயபெருமாள் | Occupation | மருத்துவர் |
| Father's name | நடராஜன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of August 2025.

13.08.2025

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜபாளையம் தொழிலாளர் அரசு நீட்டுறுதி மருந்தகத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகீறேன். நான் கடநத 16.01.2016 அன்று வத்திராயிருப்பு அரசு மரு்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது பிற்பகல் 3.45 மணியளவில் 30 வயது மதிக்கத்தக்க அதிஷ்டகுமார் என்ற ஆண் த/பெ. வெங்கடாசலம் தாட்கோ காலனி சுந்தரபாண்டியம் என்பவர் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரை விசாரித்தபோது 16.01.2016 அன்று மதியம் 3.00 மணியளவில் சுந்தரபாண்டியம் ஆர் 91 காலனி அருகே இனம் தெரிந்த நபர் தன்னை பாட்டிலால் மற்றும் கம்பால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்து பார்த்ததில் சிராய்ப்பு காயம் 3*0.2 செ.மீ வலது பக்க வாட்டு தலையில் காணப்பட்டது. அவருக்கு வெளிநோயாளியாக சிகிச்சை அளித்தன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். **காயச்சான்று அ.சா.ஆ 3 ஆகும்**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

அ.சா.1 என்னிடம் இனம் தெரிந்த நபர் கம்பாலும் பாட்டிலாலும் தாக்கியதாக கூறினார் என்றால் சரிதான். அவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தபோது அவருககு வலது பக்க தலையில் 3*0.2 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது என்றால் சரிதான். பொதுவாக காயமானது மதுபாட்டிலாலோ கம்பாலோ அடித்திருந்தால் அடிபட்ட இடத்தில் வீக்கமும் ஏற்படும் என்றால் சரிதான். அ.சா.1 க்கு அடிபட்ட இடத்தில் வீக்க காயம் எதுவும் காணப்படவில்லை. ஒரு நபர் வீட்டிலுள்ள சொரசொரப்பான சுவரில் இடித்துக்கொண்டாலும் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். பொதுவாக மதுபாட்டிலாலோ கம்பாலோ அடித்திருந்தால் சிராய்ப்பு காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.

Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.5/2017

**Depositions of PW- 4**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.மலைச்செல்வம் | Occupation | ஆட்டோ ஓட்டுநர் |
| Father's name | குருசாமி | Calling | |
| Village | சுந்தரபாண்டியம் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of August 2025.

<u>13.08.2025</u>

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சுந்தரபாண்டியத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 16.01.2016 ம் தேதி மாலை சுமார் 7 மணியளவில் கிருஷ்ணன்கோவில் போலீசார் வந்து சண்டை நடந்ததாக சொல்லி சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். தயார் செய்த பார்வை மகஜரில் நானும் முத்துச்சாமியும் கையெழுத்து செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ 2 ஆகும்**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நானும் அ.சா.1ம் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து சுமார் 10 அடி தொலைவில் எனது வீடு உள்ளது. சம்பவமானது ராமரின் கடை முன்பு நடந்தது என்றால் சரிதான். கடைக்கு வடக்கு பகுதியில் சுப்பிரமணியன் காரை வீடும், வெயிலுமுத்துவின் ஓட்டு வீடும் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனக்கு ஓரளவிற்கு எழுத, படிக்க தெரியும். நான் மேற்படி கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்பது பற்றி படித்து பார்த்துதான் கையெழுத்து

செய்தேன். நான் மேற்படி கையெழுத்தை சம்பவ இடத்தில் வைத்து செய்தேன். போலீசார் என்னிடம் கையெழுத்து பெற்ற அன்று மாலை என்னை விசாரித்தனர். இவ்வழக்கின் எதிரி கணேஷ்காமுவும் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். கணேஷ்காமு என்மீது புகார் கொடுத்து அதன்அடிப்படையில் என்மீது 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவை மேற்படி சம்பவத்திற்கு பின்னிட்டு தான் பதிவு செய்யப்பட்டது. எங்கள் ஊரில் அ.சா.1 ஒரு தரப்பாகவும், இவ்வழக்கின் எதிரியான கணேஷ்காமு மற்றொரு தரப்பாகவும் ஊரில் இருந்தார்கள் என்றாலும் அவர்களுக்குள் ஏற்கனவே முன்பகை உள்ளது என்றாலும் சரியல்ல. எதிரி அ.சா.1 ன் மீது நிறைய புகார் கொடுத்து அவை கிருஷணன்கோவில் காவல்நிலையத்தில் நிலுவையிலுள்ளது என்றால் சரிதான் ஆனால் அவையனைத்தும் இவ்வழக்கிற்கு பின்னிட்டு கொடுக்கப்பட்ட புகார். அ.சா1 எனது மைத்துனர் ஆவார். இவ்வழக்கு சம்பவம் நடந்த அன்றே கணேஷ்காமு என்பவர் அ.சா.1 ன் மீது புகார் கொடுத்து அதில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தற்போது வழக்கானது இந்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும் எனக்கும் எதிரி கணேஷ்காமுவிற்கும் உள்ள முன்பகை காரணமாக அவருக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.